15 OCT 2
Eastern University,

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## EXTENSION PROGRAMME

## FIRST SEMESTER EXAMINATION IN CERTIFICATE IN BUSINESS ADMINISTRATION - 2004/2005 (March 2005)

## CBA – 1121 TIME MANAGEMENT

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 01 மணித்தியாலம்

1. உமது வாழ்க்கையில் நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் யாது?
2. மிகவும் வினைத்திறனான நேர முகாமைத்துவத்திற்கான பிரதான தடைகள் யாவை?
3. நேர முகாமைத்துவத்தில் இலக்குகள் ஏன் முக்கியமானவை?
4. "முகாமைத்துவத்திறன்களில் நேர முகாமைத்துவத் திறன் மிகவும் முக்கியமானது" மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?
5. நேர முகாமைத்துவத் திட்டமிடலின் வகைகளைப் பட்டியற்படுத்துக?
6. நடுத்தரகால நேரமுகாமைத்துவத்திட்டமிடலை பின்பற்றுவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான படிநிலைகள் எவை?
7. ஒரு வினைத்திறனான நேரமுகாமைத்துவத்திற்கு கைக் கொள்வதற்கு தேவையான 4 தேவைப்பாடுகளை விளக்குக?
8. உமது வாழ்க்கையில், பொதுவான நேர வீணாக்கிகள் சிலவற்றை அடையாளம் காண்க?
9. நேர முகாமைத்துவத்திற்கான விதிமுறைகள் (Guidelines) பத்தில் நான்கை குறிப்பிடுக.
10. முதன்மைப்படுத்தல் பட்டியலைத் தயாரிப்பதில் பின்பற்றப்படும் இரு முறைகளைப் பட்டியற்படுத்துக?
11. குறிப்பிட்ட ஒரு நாளில் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில், அவை ஒவ்வொன்றுக்குமான நேரப் பாதீட்டுடன் பட்டியல் ஒன்றைத் (To – Do – list) தயார் செய்க?

12. "மிக வினைத்திறனான நேரமுகாமைத்துவம்" எனும் பதத்தில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

13. உமது வேலை நேரத்தை சேமிக்க கூடியதாகக் காணப்படும் சில நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை அடையாளம் காண்க?

14. நேர முகாமைத்துவத்தில் கையளித்தல் ஏன் முக்கியமானது?

15. பிறரிடம் கையளித்து நிறைவேற்றக்கூடிய தன்மை கொண்டதும், பிறரிடம் கையளித்து நிறைவேற்ற முடியாத தன்மை கொண்டதுமான சில கருமங்களை அடையாளம் காண்க?

16. தொழில், குறைந்த அளவான கையளிப்பு இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதைப் புலப்படுத்தும் சில குறிகாட்டிகளை பட்டியற்படுத்துக.

17. நேரமுகாமைத்துவத்தில் அட்டவணையிடலின் நன்மைகள் எவை?

18. நீர் ஓர் குழுவில் சேர்ந்து பணிபுரியும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நேர முகாமைத்துவ நடைமுறைகள் எவை?

19. எவ்வாறான வழி முறைகளில் பரபரப்பான முகாமையாளர்களிற்கு நேரமுகாமைத்துவம் உதவுகின்றது?

20. நீர் எவ்வாறு ஒரு சாதகமான மனநிலையை மற்றவர்கள் தொடர்பில் அபிவிருத்தி செய்வீர் எனக் குறிப்பிடுக?

21. நேரமுகாமைத்துவத்தில் உளவியல் ரீதியான தாக்கத்தை விளக்குக.

22. சிறந்த நேரமுகாமைத்துவத்திற்கான பொன்விதிகள் (Golden Rules for good time Management) சிலவற்றைக் குறிப்பிடுக?

23. கையளிப்பிற்கான தடைகளையும், கையளிப்பின் இரு நன்மைகளையும் பட்டியற்படுத்துக?

24. நேர முகாமைத்துவத்தில், முதன்மைப்படுத்தல்களை மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் எவை?

25. நேர வளத்தின் சில முக்கியமான தன்மைகள் / பண்புகள் / இயல்புகளை அடையாளம் காண்க?

**(04 x 25 = 100 புள்ளிகள்)**